Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ் ISSN: 3049-0723 (Online)
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

Volume 1, No. 04 |January 2025

Eight types of meipadugal in Children's literature

Dr. B. Periyaswamy
Assistant Professor, Department of Tamil, Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India, MAIL ID: periyaswamydeva@gmail.com, CELL : 9345315385, https://orcid.org/0000-0002-7395-9699

ABSTRACT

Children's literature such as drama, poetry, short story, picture story, children's songs etc. can help to increase the thoughts and energy of children. Which can inculcate virtues and ideals among the younger generation. Also, Meippadu are called inner feelings. It is fundamental to psychological research. Knowing this, Tolkappiyar has created a Seperate Chepter for this. Based on these, this article has investigated the Eight Meipadugal found in the works of children's literature writers.

ARTICLE INFO

Received : 01 Nov 2024
Revised : 20 Nov 2024
Accepted : 01 Jan 2025

KEYWORDS
Juvenile Literature, Fiction, Fiction, Emotions, Children's Literature

Suggested Citation (APA Style 7th Edition):

சிறுவர் இலக்கியத்தில் எண்வகை மெய்ப்பாடுகள்

முனைவர் பீ. பெரியசாமி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி, ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா, மின்னஞ்சல்: periyaswamydeva@gmail.com, கைபேசி: 9345315385,**https://orcid.org/0000-0002-7395-9699**,

ஆய்வுச்சுருக்கம்

சிறுவர்களுக்கான இலக்கியங்களான நாடகம், கவிதை, சிறுகதை, படக்கதை, சிறுவர் பாடல்கள் முதலியவை சிறுவர்களின் எண்ணங்களையும் ஆற்றலையும் மிகுவிக்க உதவக்கூடியவைகள். அவைகள் இளந்தலைமுறையினரிடையே நற்பண்புகளையும் நற்சிந்தனைகளையும் உருவாக்கக் கூடியவைகள். மேலும், மெய்ப்பாடுகள் உள்ளத்து உணர்ச்சிகள் எனப்படுகின்றன. இது உளவியல்

ஆய்விற்கு அடிப்படையானது. இதனை அறிந்தே இதற்கு தனி இயல் வகுத்துள்ளார் தொல்காப்பியர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் இலக்கிய எழுத்தாளர்களின் படைப்புகளில் காணப்படும் எண்வகை மெய்ப்பாடுகள் குறித்து இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.

முக்கியச் சொற்கள்

சிறார் இலக்கியம், தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், உணர்ச்சிகள், குழந்தை இலக்கியம்

முன்னுரை

நம் வாழ்வில் நம்மை அறியாமல் வெளிப்படும் உணர்சிகளை அறிவுக் கொண்டு ஆராய்ந்தறிய வேண்டியவில்லை. அவ்வாறு வெளிப்படும் உணர்சிகளையே தொல்காப்பியர் மெய்ப்பாடுகள் என்கிறார். இதன் சிறப்பினைக் கருதி செய்யுளின் ஓர் அங்கமாகவும் செய்யுளியலில் குறிப்பிடதோடு மட்டுமல்லாமல் மெய்ப்பாட்டியல் எனத் தனியொரு இயலையும் வகுத்து இதற்கு இலக்கணம் கூறியுள்ளார். இது பிற்காலத்திய உளவியல் ஆய்விற்கு அடிப்படையாகத் திகழ்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு சிறார் இலக்கியங்களில் வெளிப்படும் எண்வகை மெய்ப்பாடுகளை இக்கட்டுரையில் காணலாம்.

மெய்ப்பாடு

மெய்ப்பாடு என்பது அகவுணர்வுகளை ஆழ்ந்து ஆராயமலே யாரும் இனிதறியப் புலப்படுத்தும் இயற்பாக உடலிற் தோன்றும் குறியாம். இதனை,

உயத்துணர் வின்றித் தலைவரு பொருளான்

மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும். (**தொல். செய். நூ.** 196)

என்கிறார் தொல்காப்பியர்.

ஒருவன் உள்ளத்தில் தோன்றிய உணர்வின் காரணமாக உடலில் வியர்தல், நடுக்கம், கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகள் காண்போரால் அறியப்படும்படி வெளிப்படுதலே மெய்ப்பாடாகும். இதனை இளம்பூரணர்,

உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்

மெய்ப்பா டென்ப மெய்யுனர்த் தோரே. (**செயிற்றியம்**)

எனும் செயிற்றிய நூற்பாவை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். அதில் மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று என்று கூறியுள்ளார். இதன் வழி,

மெய்ப்பாடென்பது ஒருவன் உள்ளக்கிடக்கையின் வழி தோன்றி பிறர் அறியப் புலப்படுவது என்பதை அறியமுடிகின்றது.

சிறார் இலக்கியம்

சிறார் இலக்கியம் என்பது சிறுவர்களுக்காக எழுதப்படும் ஓர் இலக்கிய வகை ஆகும். இது பொதுவாக பனிரெண்டு வயதுக்கு உட்பட்டோருக்கு உரியதாகும். தமிழில் 16-ஆம் நூற்றாண்டில் ஔவையார் இயற்றிய ஆத்திச்சூடி தமிழ் சிறார் இலக்கிய தோற்றத்திற்கு அடிப்படை எனலாம். இச்சிறார் இலக்கியங்களில் தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், விடுகதை, சித்திரக்கதை, அறநெறி கதைகள், வேடிக்கை கதைகள், சிறார் பாடல்கள், நாடகங்கள் போன்றன குறிப்பிடத்தக்கன. இவ்வகை இலக்கிய எழுத்தாளர்களில் அழ. வள்ளியப்பா, வி. கிருஷ்ணமூர்த்தி, கோ. ஜெயலட்சுமி, ரேவதி, ஆலந்தூர். கோ. மோகனரங்கன், பூவண்ணன், பாணன், திருச்சிபாரதன், தமிழன்பன், எம். சோலையப்பன், செல்லகணபதி, ரா. சுப்பிரமணியம், சி.ஜி. சாந்தகுமார், கூத்தபிரான், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, அகிலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எண்வகை மெய்ப்பாடுகள்

தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை முதல் நிலையில் எண்வகைகளாகப் பிரிக்கிறார். அவை,

நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று

அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப. (**தொல். மெய். நூ.**3)

என்கிறார். இதில்,

1. நகையென்பது சிரிப்பு, அது முறுவலித்து நகுதல், அளவே சிரித்தல், பெருகச் சிரித்தல் என மூன்றாகும்.
2. அழுகையென்பது அவலம், அஃது இருவகைப்படும். தானே அவலித்தலும் பிறர் அவலங்கண்டு அவலித்தல். இவற்றுள் ஒன்று கருணையெனவும் மற்றொன்று அவலமெனவும் பட்டுச் சுவை ஒன்பதாகலுமுடையது.
3. இளிவரல் என்பது இழிபு.
4. மருட்கை என்பது வியப்பு; அற்புதமென்றும் உரைப்பர்.
5. அச்சம் என்பது பயம்.

6. பெருமிதம் என்பது வீரம்.
7. வெகுளி என்பது உருத்திரம்.
8. உவகை என்பது காமம் முதலிய மகிழ்ச்சி.

மேற்கூறிய எட்டும் நான்கு நான்கு நிலைகளன்களைக் கொண்டு பிறக்கும்.

நகை

நகை என்பதை சிரிப்பு என்பர். இது தோன்றும் முறையினைத் தொல்காப்பியர்.

எள்ளல் இளமை பேதைமை மடனென்று

உள்ளப் பட்ட நகைநான் கென்ப. (**தொல். மெய். நூ.**4)

என்று கூறியுள்ளார். இதனுள், எள்ளல் என்பது கேலி. இளமையென்பது பிள்ளைத்தன்மை, பேதைமை என்பது அறிவின்மை. மடனென்பது ஏழைமை எனக் கொள்வர். மேலும், இதனை விரித்தோதின், எள்ளலென்பது தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நகுதலுமென இரண்டாகும். இளமையென்பது தான் இளமையாற் நகுதலும் பிறரிளமை கண்டு தான் நகுதலுமென இரண்டாகும். பேதைமை என்பது அறிவின்மை. மடைமையென்பது பெரும்பாண்மையும் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. இவையுந் தன் பேதைமை யான் நகுதலும் பிறன் பேதமையால் நகுதலும் தம்மடமையால் நகுதலும் பிறன் மடமையான் நகுதலுமென இவ்விரண்டாம்..

கதாபாத்திரங்கள் அறியாமையால் பேசும்போது அவர்களிடம் வெளிப்படும் பேச்சுக்கள் நகைச்சுவையை ஊட்டுகின்றன. ‘சுண்டுவிரல் சீமா’ என்ற படைப்பில் மைய பாத்திரமான குழந்தை சீமா, துறுதுறு என இருப்பாள். அவள் மரத்தில் ஏறிய ஒரு அணிலை கண்டு அதை தன்னுடன் விளையாட அழைக்கிறாள். இதில்,

> **அணில் தம்பி! அணில் தம்பி! என்னைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன். இந்தா, உன் கொய்யாக்காய், அணில் தம்பி! என்னுடன் பேசமாட்டாயா? என்னோடு பழமா? காயா?** (**சுண்டுவிரல் சீமா, பக்.** 18-19)

என்று சீமா பேசுகிறாள். இதில் அணிலை உயர்திணை போல உறவுமுறை வைத்து அழைத்தலும், மனிதர்களிடம் பேசுவது போல் அதனிடம் பேசுதலும் நகைச்சுவையைத் தோற்றுவிக்கின்றன.

'பாரதியின் மோட்டார்' என்ற நாவலில், நாய், கழுதை, குரங்கு, கரடி ஆகிய நான்கும் கார் ஒன்றை திருடிக் கொண்டு செல்கின்றன. அவை போகும் வழியில் திடீரென்று கார் நின்றுவிடுகிறது. நான்கும் எவ்வளவு முயன்று தள்ளியும் அது இயங்கவில்லை. அப்போது கரடி கூறுகின்றது.

> **உம்! இந்த மனிதர்கள் சூதுவாது நிரம்பியவர்கள் என்று நான் அப்போதே சொல்லவில்லையா? தங்களுக்கு வேண்டுமானால் இயந்திரங்கள் ஓடவும், மற்றவர்களுக்கு ஓடாதிருக்கவும் சூது செய்திருப்பார்கள். இனிமேல் என்னால் தள்ளவே முடியாது.** (**மாருதியின் மோட்டார், ப.**57)

என்கிறது. இயந்திரம் பழுதானதால் வண்டி இயங்கவில்லை என்பதை அறியாமல் கரடி, மனிதர்களின் மீது குற்றம் சாட்டுவது நகைச்சுவையூட்டுவதாக அமைகிறது.

ஒருமுறை ஆஞ்சநேயர், காட்டில் தவம் செய்து கொண்டிருக்கிறார். அப்போது அங்கு வருகைதரும் பீமன், தனக்கு வழி விடுமாறு கேட்கிறார். ஆஞ்சநேயர் அதனை செய்யவில்லை. உடனே பீமன்,

> **"ஏ! குரங்கே! எது நேர்ந்தாலும் அஞ்சமாட்டேன். வழியை விடு. வீணாக என்னால் துன்பப்படாதே!"** (**ஆஞ்சனேயர் செய்த வேடிக்கை, ப.**3)

என்கிறார். இதில், 'ஏ குரங்கே!' என்பதில் உள்ள 'ஏ' என்ற எழுத்து பீமனின் எள்ளல் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

'மந்திரவாதியின் மகள்' என்ற நூலில், கரப்பான் பூச்சியினுடைய வளர்ச்சியின் ஒரு பகுதியே வெள்ளைக் கரப்பான் என்று சுவர்க்கோழி கூறுகிறது. இதனைக் கேட்ட மணி,

> **"பூ! இவ்வளவுதானா? வெள்ளைக் காரப்பான் வெள்ளை யானைப் போல யோகத்தைக் கொடுக்கக் கூடியது என்று சொல்லக் கேட்டு நம்பியும் விட்டேன் நான்!"** (**மந்திரவாதியின் மகள், ப.**16)

என்கிறான். இக்கூற்றில் 'பூ!' என்ற எழுத்து மணியின் எள்ளல் உணர்ச்சியைக் காட்டுகிறது.

ஒரு கதாபாத்திரம் மற்றொரு கதாபாத்திரத்தை புகழ்வது போல இகழ்ந்து பேசுவதன் மூலமும் நகைச்சுவை உணர்வு தோற்றுவிக்கப்படுகிறது. 'உள்ளமே திருக்கோயில்' என்ற நாடகத்தில் கிட்டு, ஒழுங்காக தேர்வு எழுதாததால் குறைவான மதிப்பெண் பெறுகிறான். இதைத் தாத்தா அறிந்து கொள்கிறார். பள்ளியிலிருந்து வரும் கிட்டுவிடம் அவர் பேசுகிறார்.

தாத்தா: இன்றைக்கு மார்க்லிஸ்ட் வரப்போகுதுன்னு நீ முன்னாடியே என்கிட்ட

ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா? நான் ஸ்கூலுக்கே வந்து

இருப்பேனே…..?

கிட்டு: எதுக்கு தாத்தா……..?

தாத்தா: எதுக்கா? உனக்குத் துணைக்குத்தான்! இந்த ஒரு மார்க்கைத் தூக்க முடியாம தூக்கிட்டு இருட்டற நேரத்துல இப்படி ஒண்டியா வந்திருக்கியே…? வழியில எவனாவது தட்டிப்பறிச்சுக்கிட்டிருந்தா………?

(**சமர்த்து மீனா**, ப.64)

என்று தாத்தாவும் பேரனும் உரையாடுவது நமக்கு நகைச்சுவையை ஏற்படுத்துகிறது.

படைப்பில் பாத்திரங்கள், அவற்றிற்கு பொருத்தமில்லாமல் உளறி பேசுவதும் நகைச்சுவையினைத் தோற்றுவிப்பதாக உள்ளது. இது இளமையின் பாற்படும். 'விண்வெளியில் மஉறாமண்டூர் மண்ணாங்கட்டி' என்ற படைப்பில், மண்ணாங்கட்டி தன் கழுதையுடன் நேர்முகத் தேர்வுக்கு செல்கிறான். தேர்வாளர்களிடம், தன் கழுதை ஒரு திரைப்படத்தில் நடித்திருப்பதாகக் கூறுகிறான். அதைக் கேட்ட உடனேயே தேர்வாளர்களில் ஒருவர்,

> **அடடே! ஆமா! அதே கழுதை! நாலுகால்! அதே ஒரு வால்! அதே கழுதை! நான் பார்த்தேன் படத்திலே!** (**விண்வெளியில் மஉறாமண்டூர் மண்ணாங்கட்டி**,**பக்.**12-13)

என்கிறார். திரைப்படம் என்றவுடன் ஆர்வத்தில் தான் பார்த்ததை விரைந்து கூற முற்பட்டு இவ்வாறு உளறி நகைச்சுவை ஊட்டுகிறார்.

ஒருவரின் பேச்சையும் செயலையும் அவருடைய தகுதிக்கு மாறாகப் புனைந்துரைக்கும்போது, அது நகைச்சுவை உண்டு பண்ணுகிறது. 'வாய் மூடா வளவன்' என்ற சிறுகதையில் எப்போதும் தின்றுக்கொண்டே இருக்கும் அரசர் காட்டுக்குச் செல்கிறார். அங்கு கிராமத்து சிறுவர்கள் நொண்டி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் அங்கு வந்த அரசரை சட்டை செய்யவே இல்லை. பொறுமை இழந்த அரசர், டேய் பையன்களா……. நான் யார் தெரியுமா? இந்த நாட்டின் ராஜா என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அதனால் எங்களுக்கு என்ன வந்தது. நொண்டி ஆடுற இடத்திலேயே குறுக்க நிக்காத. அப்படியே ஓரமா மரத்தடிக்கு போய்க்க என்றான் நொண்டி அடித்து நண்பர்களை பிடித்துக் கொண்டிருந்த சிறுவன். பிறகு, ஒருவழியாக சிறுவர்கள் அரசனையும் நொண்டி விளையாட்டில் சேர்த்துக் கொண்டனர். ஆனால், அதற்கு ஒரு நிபந்தனையும் விதிக்கின்றனர்.

> **நொண்டி ஆட்டத்துல தோத்துப்போயிட்டா என்ன தண்டனை தெரியுமா? எங்க எல்லோரையும் ஒவ்வொருத்தரா முதுகில் பச்சைக்குதிரை தூக்கிட்டு, இந்த பத்து மரத்தையும் சுத்தி வரணும்.** (**அப்பன ராஜா, ப.** 17)

என்று கூறுகின்றனர். இச்சிறுகதையில் அரசர், சிறுவர் இருவரிடையே நடைபெறும் பேச்சும் செயலும் இயல்புக்கு மாறாக அமைந்து படிப்பவருக்கு நகைச்சுவை ஊட்டுவதை உணரலாம்.

நகையெனும் மெய்ப்பாடு மேற்கூரிய உதாரணங்களின் அடிப்படையில் சிறார் இலக்கியங்களில் வெளிப்படுவதை அறிய முடிகின்றது. மேலும், நகைச்சுவையே சிறுவர்கள் உள்ளம் மகிழ்ந்திருக்க காரணமாகும். அவர்களிடையே அவ்வகை உணர்வை இச்சிறார் இலக்கியங்கள் தூண்டுகின்றன என்பதை இவற்றின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

அழுகை

அழுகை தோன்றும் முறையினைத் தொல்காப்பியர்.

இழிவே இழவே அசைவே வறுமையென

விளிவில் கொள்கை அழுகை நான்கே(**தொல். மெய். நூ.**4)

என்கிறார். இதில், இழிவென்பது பிறரால் தான் எளியன் ஆக்கப்படுதலும் தன்னால் பிறர் எளியனாக்கப்படுதலாலும் பிறப்பது. இழவென்பது உயிரானும் பொருளானும் இழத்தலால் தோன்றுவது. அசைவென்பது தன்னிலையில் தாழ்தலாகும். வறுமையென்பது போகந்துய்க்கப் பெறாத பற்றுள்ளம் என்பர்.

இருபெரும் நாட்டினருக்கிடையே கடுமையான போர் நடைபெறுகிறது. போர்க்களம் முழுவதும் ரத்த ஆறு ஓடுகிறது. எண்ணற்ற வீரர்கள் மடிந்தனர். மாலை நேரம் அப்போர்க்களக் காட்சியை,

> **"இந்தப் பார்க்கச் சகிக்காத காட்சியை அதற்கு மேலும் சூரியனால் காண முடியவில்லை, தலை சுற்றியது, மயக்கம் ஏற்பட்டது. மேலைக் கடலில் விழுந்தான் சூரியன்".** (**திருச்சிபாரதன், போர் முடிந்தது, ப.**9)

என்கிறார் ஆசிரியர். "போர் முடிந்தது" என்னும் சிறுகதையில் அமைந்துள்ள இருவருணனை குழந்தைகளிடம் அவல உணர்வைத் தூண்டுகிறது. போரினால் பல தீமைகள் விளைகின்றன என்ற ஆசிரியரின் கருத்துக்கு அரணாக இது அமைகிறது.

சிவகுரு பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வரும்போது ஒரு சைக்கிள் அவன் மீது மோதி விடுகிறது. கீழே விழுந்துவிடுகிறான் சிவகுரு. அப்போது,

> **“ஆ! எந்த தடியனோ வேகமாக வந்த மோதிவிட்டுப் போறானே! ஆ! அம்மா! டேய் தூக்குங்கடா…!”** (**பயம் கொள்ளலாகாது பாப்பா, ப.**16)

என்று கூறுகிறான். “பயம் கொள்ளலாகாது பாப்பா….” என்ற நாடகத்தில் இடம்பெறும் இப்பேச்சில் “ஆ! அம்மா!” ஆகிய சொற்கள் கதாபாத்திரம் வலியால் துன்புறுவதை நமக்கு உணர்த்துகின்றன. இது இழிவின் பாற்பட்டது. இவ்வாறு அழுகையெனும் மெய்ப்பாடு சிறார் இலக்கியங்களில் வெளிப்பட்டுள்ளது.

இளிவரல்

இளிவரல் தோன்றும் களனைத் தொல்காப்பியர்.

மூப்பே பிணியே வருத்த மென்மையோடு

யாப்புற வந்த இளிவரல் நான்கே. (**தொல். மெய். நூ.**6)

என்று கூறுகிறார். இதில், முப்பென்பது முதுமை. பிணியென்பது நோய். வருத்தமென்பது இடுக்கண். மென்மையென்பது எளிமை எனவாகும்.

விடுமுறை நாட்களில் பொழுதுபோகாமல் இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருக்கிறான் சிறுவன் ராஜ். எனவே, அவன் தன் நண்பன் வீட்டுக்குச் செல்லலாம் என்று நினைக்கின்றான். அந்நேரம் பார்த்து அவனுடைய அம்மா, வீட்டைப் பார்த்துக் கொள்ள சொல்லிவிட்டு தோட்டத்துக்குச் சென்று விடுகிறாள்.

> **போச்சுடா! எல்லாம் பாழாப்போச்சு! இனி அம்மா வரும் வரையில் சமையலறைக்குக் காவலிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பூனை வந்து பாத்திரத்தை உருட்டும்.** (**விடுமுறை நாட்களிலே, ப.**22)

என்று ராஜி தனக்குள் தானே பேசிக்கொள்கிறான். இதில் ‘போச்சுடா’ என்ற சொல் அவனுடைய வருத்தத்தை நமக்கு உணர்த்த உதவுகிறது இந்நிகழ்ச்சி “விடுமுறை நாட்களிலே….” என்ற படைப்பில் இடம்பெற்றுள்ளது. மேலும்,

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி

அடடா மழையில் நனையாதே

மாட்டிக் கொண்டால்

மழையால் உனக்கு

வருமே தும்மல் ஏராளம் (**பாப்பா பாட்டுப் பாடுவோம்** (**தொகுதி** -2), **ப**.5)

எனும் 'ஆட்டுக்குட்டி' என்ற இக்கவிதையில் ஆட்டுக்குட்டி மழையில் நனைந்ததைக் கண்டு ஒரு குழந்தை வருந்துவதை 'அடடா' என்ற சொல் நமக்கு வெளிப்படுத்துகிறது.

'சண்டையும் சமாதானமும்' என்ற நாடகத்தில் ஆசிரியர் வகுப்பில் பேசுகிறார். அப்போது,

> **"எல்லாரும் உட்காருங்க... அப்பாடா! என்ன வெய்யில்!** (**பெருமூச்சு**)**"** (**நேர்மைக்குப் பரிசு, ப**.39)

என்கிறார். அவருடைய பேச்சில் இருக்கும் "அப்பாடா!" என்ற சொல் களைப்பினால் அவருக்கு உண்டான வருத்தத்தை நமக்கு உணர்த்துகிறது.

'படகோட்டி' என்ற சிறுகதையில் சரோஜாவும் சங்கரனும் நெருங்கிய நண்பர்கள் ஒரு நாள் இருவருக்குமிடையே சண்டை ஏற்பட்டுகிறது. கோபமான சங்கரன் சரோஜாவைப் பிடித்துக் கீழே தள்ளி விடுகிறான். இதனால், சரோஜா கோபம் கொள்கிறாள். அப்போது,

> **"சீ! நீயும் ஒரு நண்பனா? போயும், போயும் உன்னிடம் சிநேகம் செய்தேனே, நான் ஒரு முட்டாள்!"** (**சிற்பியின் மகள், ப**.56)

என்று கூறிச் செல்கிறாள். இதில் 'சீ!' என்ற எழுத்து அவன் மனத்தில் எழுந்த வெறுப்பினால் உண்டான வருத்தத்தை உணர்த்துகிறது.

அவசரமாகப் பள்ளிக்குப் போகும் சோமன், தன் பேனாவில் 'மை' இல்லை என்பதால் அப்பாவின் பேனாவினை எடுத்துச் செல்கிறான். பள்ளியில் கட்டுரை எழுதத் தொடங்கும்போது தான் அதிலும் 'மை' இல்லை என்பது அவனுக்கு தெரிகிறது. அப்போது,

ஆனால் அதுவும் எழுதியதோ?

அதுதான் இல்லை, "அட சனியன்

பேனா 'மக்கர்' செய்கிறது

பெரும்பழி வாங்கிக் கொள்கிறது.

என்ன செய்வேன்?" என்றபடி

எடுத்(**து**) **அதை உதறிப் பார்த்தனனே**

சின்னத் துளியும் சொட்டவில்லை,

சீச்சி, அதிலும் மையில்லை! (**சிறுவர் கதைப்பாடல்கள்**(**தொ.நூ**), **ப**.130)

‘சோமனின் அவசரம்’ என்ற இக்கவிதையில் ‘அட சனியன்’, *சீச்சீ*’ ஆகிய சொற்கள் சோமனின் வருத்தத்தைக் காட்டுகின்றன. இவ்வாறு இளிவரல் எனும் மெய்ப்பாடு தோன்றி சிறுவர் இலக்கியங்களை வாசிக்கும் வாசகர்களை உணர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

மருட்கை

மருட்கை தோன்றும் முறையினைத் தொல்காப்பியர்.

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு

மதிமை சாலா மருட்கை நான்கே. (**தொல். மெய். நூ.**7)

எ்று கூறியுள்ளார். இதில், புதுமை ஆவது யாதொன்றும் எவ்விடத்தினும் எக்காலத்திலும் தோன்றாததோர் பொருள் தோன்றிய வழி வியத்தல். பெருமையென்பது பண்டு கண்ட பொருள்கள் போலாத பொருள்கள் அவ்வளவிற் பெருத்தனக் கண்டு வியத்தல். சிறுமை என்பது பிறவும் நுண்ணியன கண்டு வியத்தல். ஆக்கமென்பது ஒன்றன் பரிணாமங் கண்டு வியத்தல்.

சோழநாட்டில் இருக்கும் ‘கண்ணன் மண்டபத்தை’ பாண்டிய மன்னன் அழிக்க திட்டமிடுகிறான். அவ்வழியிலிருந்த மண்டபத்தை காக்க சிறுவர்கள் திட்டமிடுகின்றனர். பாண்டியர்கள் மண்டபத்தை இடிக்க இயலாதபடி ஏராளமான சிறுவர்கள் மண்டபத்தில் உச்சியில் ஏறுவிடுகின்றனர். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பாண்டிய வீரன்,

> **ஏய் பசங்களா, யாரு நீங்க? ஏண்டா மண்டபத்து உச்சியிலே நிக்குறீங்க? அம்மாடி! இவ்வளவு உயரத்தில் எப்படிபடா ஏறனீங்க?**(**கண்ணன் மண்டபம், ப.**18)

என்கிறான். ‘கண்ணன் மண்டபம்’ என்ற நாடகத்தில் காணப்படும் இக்கூற்றில் ‘அம்மாடி’ என்ற சொல் வீரன் வியப்பைக் காட்டுகிறது.

‘வணக்கம் செய்த வளையாபதி’ என்ற நாவலில் வளையாபதி, புதிர் நிறைந்த கெட்டிக்காரன். அவன் கோட்டைக்குள் தனியே செல்கிறான். ஆனால், அங்கு அகப்பட்டுக் கொண்ட அவனுக்கு வெளியில் வரத் தெரியவில்லை. சோர்ந்து போனவன், அங்கு ஒரு சிலையின் கையில் இரண்டு பழங்கள் இருப்பதைப் பார்க்கிறான். அவற்றை எடுத்து சாப்பிட்டவுடன் அவன் ‘அடாடா’ என்கிறான். இச்சொல் சுவையினால் அவன் அடைந்த வியப்பிப்பினை நமக்கு உணர்த்துகிறது.

‘மாருதியின் மோட்டார்’ என்னும் நாவலில் ஒரு வர்ணனையில் முழுவதும் இன்பச் சுவையால் நிரம்பியுள்ளது.

> **ஆகா! அந்த ஆற்றுக்குத்தான் என்ன களிப்பு! என்ன கொண்டாட்டம்! ஆற்றுநீர் சலசலவென்று குதுகலமாக பேசியபடி, நீர் துளிகள் நின்ற நிலையில் நிற்காமல் துள்ளி குதித்து ஒன்றையொன்று எட்டிப் பிடித்து அணைந்து, பிரிந்து, குழைந்து, நாட்டியம் பலவும் ஆடி சூரிய ஒளியில் பளபளவென்று மின்னி மினுக்கி ஓடிக்கொண்டிருந்தது.** (**மாருதியின் மோட்டார். பக்.** 14-15)

ஆறு, பேசுவதாகவும் மகிழ்ந்து நாட்டியம் ஆடுவதாகவும் காட்டுவதன் வழி படைப்பாளி சிறார்களிடம் இன்பச்சுவையை ஏற்படுத்துகிறார். இதேபோல கவிதையிலும் பல இன்பச் சுவையினை ஊட்டும் வண்ணம் அமைந்துள்ளன.

அந்த நிலா வந்தவுடன்

அல்லிப் பூவும் சிரிக்குமே

சந்திரனைக் கண்டு கடல்

தாவித் தாவிக் உதிக்குமே (**பாடு கண்ணே பாடு, ப.**14)

என்பதும்,

வண்டுப் பாட்டைக் கேட்டதும்

மகிழ்ச்சி கொண்டு தேனினை

'உண்டு போங்கள்!' என்றுமே

உவந்து தந்த வாழ்ந்தது! (**குடைராட்டினம், ப.**26)

என்பதும், மாலையில் அல்லி மலர்வதும், கடலில் அலைகள் புரல்வதும், பூ, சிரிப்பதாகவும், கடல் குதிப்பதாகவும் காட்டுகிறார். இதே போல வண்டு பாடுவதாகவும், அதன்பாட்டில் மயங்கிப் பூக்கள் தேனைக் கொடுப்பதாகவும் புனைந்துள்ளார். இவை சிறார்களிடத்தில் எதையும் இன்பச்சுவையுடன் பார்க்கும் பழக்கத்தை வளர்க்கின்றன எனலாம்.

வானில் மனிதன் மூச்சுத் திணறல் ஏற்படாமல் பயணிக்க முடியுமா? அல்லது அப்பயணத்தினால் உயிர் இழக்க நேருமா? என்பதை அறிய விரும்பினர், மாண்ட் கோல்பர்ச் சகோதரர்கள். அதற்காக அவர்கள் ஆடு, கோழி, வாத்து ஆகிய மூன்றையும் வானில் பறக்க விட்டனர். பறந்து சென்ற ஆடு,

> **"அட முட்டாள் மனிதர்கள்! வானத்தில் புல் முளைக்கும் என்று உங்களுக்கு யார் சொன்னது? வெட்ட வெளியில் பேய்க் காற்று தான் வீசுகிறது. குளிரால் உடல் நடுங்குகிறதே**

என்று ஆடு அப்பயணம் முழுவதும் மே… மே… மே… என்று கத்திக்கொண்டேயிருந்தது.” (**சுண்டுவிரல் சீமா, ப.**106)

“சுண்டு விரல் சீமா” என்ற படைப்பில் அமைந்துள்ள இச்செய்தி நகையுணர்வைத் தூண்டுவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

படைப்பில் காட்டப்படும் சூழலுக்கு எத்தகு உணர்வுகளைச் சிறார்களிடம் ஏற்படுத்தினால் படைப்பு சிறக்கும் என்று அறிந்து அத்தகு உணர்வுகளைப் படைப்பாளர்கள் ஏற்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு மருட்கையெனும் மெய்ப்பாடு சிறார் இலக்கியங்களில் நிறைந்துள்ளதை காண இயலுகின்றது.

அச்சம்

அச்சத்திற்குரிய களன்களாகத் தொல்காப்பியர்.

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே. (**தொல். மெய். நூ.**8)

என்றுரைத்துள்ளார். இதில், அணங்கு என்பன எதிர்ப்பட்டாரை வருத்தும் இயல்பினவாகிய பேய் பூதம் முதலியன. விலங்காவன அரிமா, புலி முதலாகவுள்ள கொடிய விலங்குகள். கள்வராவார் சோர்வு பார்த்துப் பிறரை வஞ்சித்துக் கொடுந்தொழில் புரிவோர் தம்இறை யென்றது தந்தை, ஆசிரியன், அரசன், வழிபடு தெய்வம் ஆகியோர்.

ஒரு நாள் புத்த பெருமான் பசியால் சோர்ந்து கிடக்கிறார். அப்போது அங்கு வரும் சிறுவனிடம், தனக்குச் சிறிது பால் கொடுக்குமாறு கேட்கிறார். அதற்குப் பதில் அளிக்கும் சிறுவன்,

ஐயையோ! ஆகாது என்றான் – **சிறுவன்,**

அண்ணலே! யானும் உனைக்

கையினால் தீண்ட வொண்ணா - இடையன் ஓர்

காட்டு மனிதன் என்றான். (**குழந்தைச் செல்வம், ப.**60)

‘புத்தரும் ஏழைச் சிறுவனும்’ என்றக் கவிதையில் காணப்படும் ‘ஐயையோ’ என்ற சொல் அச்சிறுவனின் அச்சத்தை நமக்குப் புலப்படுத்துகிறது.

‘பொன்னம்மா ஒரு புதுமைப் பெண்’ என்ற நாடகத்தில் இன்பவல்லி எனும் கதாபாத்திரம் தன் தம்பி தங்கைகளை மிரட்டி, அவர்களிடமிருக்கும் பொருள்களைப் பறித்துக் கொள்கிறது. குடகுமலை

குள்ளச்சாமி என்பவர், அவர்களிருவருக்கும் தண்டனை வழங்குவார் என்கிறாள். இதைக்கேட்டு தங்கை அன்பு முல்லை அக்காள் இன்ப வல்லியிடம் பேசுகிறாள்.

அன்பு - என்ன தண்டனை தருவார் அக்கா?

இன்ப - சிலருக்கு ஒரு காதைக் குறைத்து விடுவார்

அன்பு – ஐயோ!

இன்பா - சிலருக்கு ஒரு விரலைக் குறைத்துவிடுவார்

அன்பு – ஐயோ! எனக்குத் தண்டனை வேண்டாம் அக்கா. (**பொன்னம்மா ஒரு புதுமைப் பெண், ப.**9)

இவ்வுரையாடலில் அன்புமுல்லை கூறும் 'ஐயோ' என்ற சொல் அவளுடைய அச்சவுணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. இவ்வாறான அச்சவுணர்வுகள் வாசகர்களைத் துடிப்புடன் இருக்கச் செய்வதோடு கதையோடு (படைப்போடு) இணைந்து பயணிக்க உணர்ச்சி வசப்பட செய்கின்றன.

பெருமிதம்

பெருமிதமெனும் வீரம் தோன்றும் முறையினைத் தொல்காப்பியர்.

கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்

சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே. (**தொல். மெய். நூ.**9)

என்று கூறியுள்ளார். இதில், கல்வியென்பது தவ முதலாகிய விச்சை. தறுகணெென்பது அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமை. இசைமையென்பது இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை. கொடையென்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாம் பொருளுங் கொடுத்தல்.

வெகுளி

வெகுளியெனும் உருத்தரம் தோன்றும் முறையினைத் தொல்காப்பியர்.

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற

வெறுப்ப வந்த வெகுளி நான்கே. (**தொல். மெய். நூ.**10)

என்று கூறியுள்ளார். இதில், உறுப்பறையாவது அங்கமாயினவற்றை அறுத்தல். குடிகோளாவது கீழ்வாழ்வாரை நலிதல். அலை என்பது வைதலும் புடைதலும். கொலை என்பது கொல்லுதல் கொருப்படுதல்.

காட்டுக்கு யார் ராஜா? என்று சிறுகதையில் புலியானது, சிங்கத்தின் கூட்டத்தாரைப் பார்த்து யார்? என்னுடன் மல்யுத்தம் செய்ய வருகிறீர்கள் என்று கேட்கிறது. சிங்கம் நரியுடன் இது பற்றி பேசுகிறது. காலதாமதம் ஆனதையடுத்து புலி,

> **“என்னுடன் மோத உங்களில் யாருக்குமே தைரியம் இல்லையா? நான் தான் இனிமேல் இந்தக் காட்டின் தலைவனா?” என்று அகங்காரத்துடன் கேட்டது”** (**காட்டுக்கு யார் ராஜா?, ப.**4)

இங்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ள ‘அகங்காரம்’ என்ற சொல் புலி எத்தகைய உணர்ச்சியில் பேசியது என்பதை உணர்த்த உதவுகிறது. அகங்காரம் என்பது தன்குடிகளை அலைத்தற்பாற்படும் என்பதால் இது வெகுளியானது.

உவகை

உவகை என்பது தோன்றும் முறையினைத் தொல்காப்பியர்.

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென

அல்லல் நீத்த உவகை நான்கே. (**தொல். மெய். நூ.**11)

என்றுரைத்துள்ளார். இதில், செல்வமென்பது நுகர்ச்சி. புலனென்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை. புணர்வென்பது காமர்புணர்ச்சி முதலாயின. விளையாட்டு என்பது யாறுங் குளனுங் காவுமாடிப் பதியிகந்து வருதல் முதலாயின.

‘மாணிக்கத்தீவு’ என்ற நாவலில், அரக்கர்களை ஒழிக்க என்னும் மாணிக்கம், சூழ்ச்சி செய்து அவர்களுக்கிடையே சண்டை உண்டாகும்படி செய்கிறான். இந்நிலையில் மந்திரக்கோல் அரக்கனின் செயலை நினைத்து கத்தரிக்காய் அரக்கன் வருந்துகிறான். உடனே மாணிக்கம், அவனிடம் இருக்கும் மந்திர சக்தியை நினைவுபடுத்துகிறான். இதைக்கேட்ட கத்தரிக்காய் அரக்கன் மகிழ்ச்சியடைகிறான். அப்போது,

> **“சபாஷ் மாணிக்கம்! நல்ல வேளையில் என் மந்திர சக்தியை நினைவு படுத்தினாய்”** (**மாணிக்கத்தீவு, ப.**45)

என்கிறான். இக்கூற்றில் ‘சபாஷ்’ என்ற சொல் பாத்திரம் அடைந்த மகிழ்ச்சியினை வெளிப்படுத்துகிறது.

‘நல்ல பையன்’ என்ற சிறுகதையில், சிறுவர்கள், வரவிருக்கும் தீபாவளிப் பண்டிகைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒரு சிறுவன்,

ஆஹா! பட்டாசுக்கட்டு, ஆனைவெடி, கம்பி மத்தாப்பு, ஏரோப்ளேன் வானம்! டப், டபார், டுப் (**நல்ல பையன், ப.5**)

என்று கூறுகிறான். இதில் அச்சிறுவனிடம் வெளிப்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியை 'ஆகா' என்ற சொல் வெளிப்படுத்துவதைக் காணலாம். இவ்வாறு உவகை எனும் மெய்ப்பாடு சிறார் இலக்கியங்களில் பயின்று வந்து நம்மை களிப்பில் ஆழ்த்துகின்றது.

முடிவுரை

சிறார் இலக்கியப் படைப்பாளர்கள் தங்கள் எண்ணத்தில் உருவாக்கிய உணர்ச்சிகளைக் குழந்தைகள் பெறுவதற்குப் பல புலப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். படைப்பாளர்கள் காட்டிய உணர்ச்சியோடு குழந்தை ஒன்றும் போது, அப்படைப்பு சிறப்படைகின்றது. வாழ்க்கையில் மகிழ்ச்சி, துன்பம், வியப்பு என தான் அனுபவித்த உணர்வுகளை வாசகர்களுக்கு கொண்டு செல்வதே படைப்பாளிகளின் படைப்பின் வெற்றிக்கு காரணமாக அமைகின்றன. அந்தவகையில் சிறார் இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புகளில் வெளிப்பட்டிருக்கும் எண்வகை மெய்ப்பாடுகளை இக்கட்டுரையின்வழி அறியமுடிகின்றது.

துணைநூற் பட்டியல்

[1.] அகிலன். நல்ல பையன், தாகம், சென்னை, 1989.

[2.] இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2014.

[3.] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, குழந்தைச் செல்வம், பாரி நிலையம், சென்னை, 1993.

[4.] கூத்தபிரான். பயம் கொள்ளலாகாது பாப்பா, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1994.

[5.] கோபாலகிருஷ்ணன், கல்வி. சுண்டுவிரல் சீமா, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1984.

[6.] கோபாலகிருஷ்ணன், கல்வி. மாருதியின் மோட்டார், சகுந்தலை நிலையம், சென்னை, 1991.

[7.] கோபாலகிருஷ்ணன். கல்வி, மந்திரவாதியின் மகள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், இரண்டாம் பதிப்பு.

[8.] சாந்தகுமார், சி.ஜி. விடுமுறை நாட்களிலே, சென்னை புக்ஸ், 1986.

[9.] சுப்பிரமணியம், ரா. பாடு கண்ணே பாடு, கங்கை புத்தக நிலையம், சென்னை, 1989.

[10.] செல்லகணபதி, பாப்பா பாட்டுப் பாடுவோம். தொகுதி -2, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1990.

[11.] சோலையப்பன். எம், விண்வெளியில் மஉறாமண்டூர் மண்ணாங்கட்டி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1988.

[12.] தமிழன்பன். குடைராட்டினம், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1990.

[13.] திருச்சிபாரதன், போர் முடிந்தது,, அசோகன் பதிப்பகம், சென்னை, 1981.

[14.] பாணன், சமர்த்து மீனா, கங்கை புத்தக நிலையம், சென்னை, 1988.

[15.] பூவண்ணன், கண்ணன் மண்டபம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1974.

[16.] பூவண்ணன், சிற்பியின் மகள், வானதி பதிப்பகம், சென்னை, 1989.

[17.] பூவண்ணன், மாணிக்கத்தீவு, கங்கை புத்தக நிலையம், சென்னை, 1989.

[18.] மோகனரங்கன், ஆலந்தூர். கோ. பொன்னம்மா ஒரு புதுமைப் பெண், வசந்தா பதிப்பகம், சென்னை, 1990.

[19.] ரேவதி, அப்பன ராஜா, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1992.

[20.] வசந்தன். வி.ர, காட்டுக்கு யார் ராஜா?(தொ.நூ), பப்ளிகேஷன் டிவிஷன், செய்தி ஒளிபரப்பு அமைச்சகம், புதுதில்லி,1992.

[21.] வள்ளியப்பா, அழ. (தொ.ஆ), சிறுவர் கதைப்பாடல்கள்(தொ.நூ), தமிழர் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1977.

[22.] ஜெயலட்சுமி. கோ, நேர்மைக்குப் பரிசு, ஸ்ரீ நிலையம், சென்னை, 1990.

References

[1.] Agilan, Nalla Paiyan, Dhagam, Chennai, 1989.

[2.] Ilampuranar (Urai), Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, 2014.

[3.] Kavimani desiga Vinayagam Pillai, Kuzhandhai Selvam, Pari Nilayam, Chennai, 1993.

[4.] Koothapiran. Bayam Kollalagathu pappa, Palaniyappa Brothers, Chennai, 1994.

[5.] Gopalakrishnan. Kalvi, Sundu viral seema, Newcentury Book House, Chennai, 1984.

[6.] Gopalakrishnan. Kalvi, Maruthiyin motor, Sagundhalai Nilayam, Chennai, 1991.

[7.] Gopalakrishnan. Kalvi, Mandhira vadhiyin magal, Newcentury Book House, Chennai, 2nd Edition.

[8.] Santhakumar, C.G., Vidumurai Natkaliley, Chennai Books, 1986.

[9.] Subramaniyam, R, Padu Kanna Padu, Gangai Puthaga Nilyam, Chennai, 1989.

[10.] Selvaganapathy, Pappa Pattu Paduvom (Vol-2),Pazhaniappa Brothers, Chennai, 1990.

[11.] Solaiyappan. M, Vinveliyil mauramandur Mannagkatti, Meenakshi Puththaga Nilyam, Madurai, 1988.

[12.] Thamizhanban, Kudairattinam, Kiruthuva Ilakkiya Sangam, Chennai, 1990.

[13.] Thiruthy Bharathan, Por Mudindhadhu, Asokan Pathipakam, Chennai, 1981.

[14.] Pannan, Samarthu Meena, Gangai Puthaga Nilayam, Chennai, 1988.

[15.] Poovanan, Kannan Mandabam, Pazhaniappa Brothers, Chennai, 1974.

[16.] Poovanan, Sirpiyinmagal, Vanathi Pathipagam, Chennai, 1989.

[17.] Poovanan, Manikkatheevu, Gangai Puththaga Nilyam, Chennai, 1989.

[18.] Moganarangan, Aalandhur. Ko. Ponnamma oru Puthumai Pen, Vasantha Pathipagam, Chennai, 1986.

[19.] Revathi. Appanna Raja, Pazhaniappa Brothers, Chennai, 1992.

[20.] Vasanthan, V.R. Kattuku Yar Raja? (tho.Nool), Publication Division, Seithi Oliparapu Amaichagam, India Arasu, 1992.

[21.] Valliappa. azha.(Vol.Ed.), Siruvar Kadhai Padalgal (Vol), Thamizhar Ezhuthalar Kutturavu Sangam, Chennai, 1977.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.